சொல்வயல்

திங்கள் மின்னிதழ்

சொல்வளமே மொழிவளம் நெல்வளமே நாட்டின்வளம்

" சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுப்பீடம்"
(திருவிளையாடற்புராணம்–
தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்)

ஐ.எஸ்.பி.என் (ISBN):978-81-958032-0-0

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு

வயல் : 7 விளைச்சல் : 69 திருவள்ளுவர் ஆண்டு 2057, சுறவம் (தை) – பிப்பிரவரி – 2026



- விண்வெளி அறிவியல்துறைக் கலைச்சொற்கள்
- தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'அறு' 'இறு' 'உறு'
- தமிழியக் குடும்பமொழிச் சொல்லாட்சிகள்
- நாற்றிசைப் பெயராக்கம் நுட்ப விளக்கம்
- அந்தி
- பரணர் பாடலில் நியூட்டன் விதி
- தலைப்பாடு = நிகழ்தகைமை; கருத்தாய்வு
- இயக்ககச் செயற்பாடு

விண்வெளி அறிவியல்துறைக் கலைச்சொற்கள்

balloonborne instrument	–	ஊதாம்பை தாங்கு கருவி
booster motor	–	ஊக்கிப்பொறி
composite propellant	–	ஈரியல் உந்துப் பொறி
homogeneous propellant	–	ஓரியல் உந்துப் பொறி
modern rocketry	–	புதுமை ஏவுகணையியல்
perilune	–	நிலவணுக்க விண்கலம்
push broom scanner	–	துடைப்ப உரு வருடி
quick look data analysis	–	விரைவுத் தரவுப் பகுப்பாய்வு
radar altimetry	–	கதுவீ உயரளவி
re–entry vehicle	–	மீள்நுழைவு விண்கலம்
reciprocating pump	–	ஊடாட்ட எக்கி
reference data reflectance	–	குறிப்புத் தரவு காட்டல்
retro–motor	–	பின்னோட்ட உந்துப்பொறி
reusable launch vehicle	–	மீள்பயன் ஏவுகலன்
scan code generator	–	துருவுக் குறியீட்டாக்கி
sliding switch	–	நழுவுச் சொடுக்கி
space gun	-	விண்வெளித் துமுக்கி
strip chart recorder	–	சுருள்பட்டை வரைபடப் பதிப்பி
twirler	–	சுழற்றுநர்
vehicle attitude programmer	–	ஊர்திக் குறிப்பாய நிரலர்
viterbi decoder	–	மறைநிலை குறிவிலக்கி
zero lift drag	–	சுழியேற்ற இழுவை
zodiacal cloud	–	ஓரை முகில்
visicorder	–	ஒளிப்படப் பதிவி
uninstrumented code	–	கருவியிலாக் கண்டறி குறியீடு

சொற்குவை (sorkuvai.tn.gov.in) வலைத்தளத்தில் தமிழுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களையும், ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ்ச்சொற்களையும் பார்த்துப் பயன்கொள்ளலாம்.

சொல்வயல்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2057, சுறவம் (தை) பிப்பிரவரி – 2026

ஆசிரியர் : திருமதி **க. பவானி**
இயக்குநர் (மு.கூ.பொ.)

பொறுப்பாசிரியர் : முனைவர் வே. கார்த்தி

இதழ்க்குழு : திரு. கி. இராமர்
திரு. ஏ. காந்தி
திருமதி. க. கத்தூரி

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
முதல் தளம், நகராட்சி நிருவாக அலுவலகக் கட்டடம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர்,
சென்னை – 600 028.
மின்னஞ்சல் : solvayal@gmail.com
வலைத்தளம் : www.sorkuvai.tn.gov.in

Directorate of Tamil Etymological Dictionary Project,
First floor, Urban Administrative office Campus,
No : 75 , Santhome high Road,
MRC Nagar, Chennai–28
Mail id : solvayal@gmail.com
Website : www.sorkuvai.tn.gov.in

ஐ.எஸ்.பி.என் (ISBN): 978-81-958032-0-0

தமிழ்ச் சொற்பிறப்பு அறிவோம் – 'அறு' 'இறு' 'உறு'

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'அறு' 'இறு' 'உறு' ஆகிய சொற்களிலிருந்து பல சொற்கள் கிளைத்து வளர்ந்த முறையினைக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.

அறு

அர் – அறு
அறு = வெட்டு, பிள, பிரி, நீங்கு, நீக்கு
அறுவாள் = அறுக்கின்ற வாள்
அறவு = நீக்கம், வரையறு – வரையறவு
அறை = அடி, அறுக்கப்பட்ட அல்லது பிரிக்கப்பட்ட இடம்.
உறுப்பறை = உறுப்பறுக்கப்பட்டது. வரையறு – வரையறை
அறுகு = அறுத்தறுத் தோடிப் படரும் புல்
அறுவை = அறுக்கும் துணி
அறுப்பு = பயிரை அறுத்தல்
அறுவடை = அறுப்பு
அற்றம் = பிறர் இல்லாத சமையம்

இறு

இற – இறு
பயிர், மக்களுடம்பு, சூரியன் என்பவை வளைந்தபின் இறத்தலை அல்லது மறைத்தலை நோக்குக
இற – சா
இறு = முடி
இறுதி = முடிவு
ஈறு = விகுதி
இறு = செலவை (பயணத்தை) முடி, தங்கு
இறை, இறைவன் = எங்கும் தங்கியிருப்பவன், கடவுள், அரசன்
இறு = கடனைத் தீர், செலுத்து
இறை = வரி
இறு = ஒருவன் சொன்னபின் மறுமொழி (பதில்) கூறு
இறை = விடை

உறு

உர் – உறு = பொருந்து
உறுத்து = அழுத்து, வலி.
உறு = வலிய
உறுப்பு = பொருந்தும் பாகம்
உறவு = பொருந்தல், கலந்து வாழ்தல்
உறவு + ஆடு = உறவாடு
உற்றார் = பொருந்தினவர், இனத்தார்
உறழ் = பொருந்து, மாறுபடு
உறழ்ச்சி = ஒப்பு, மாறுபாடு (விகற்பம்)
உறை = பொருந்து, மேற்படு, தங்கு, தாக்கு, தங்கும் கூடு
உறையுள் = இருப்பிடம்

இவ்வாறு தமிழ்மொழியின் சொற்பிறப்பு வரலாறு குறித்து மொழிஞாயிறு பாவாணர் எழுதியுள்ள செய்திகளை நாமும் உணர்ந்து வருங்காலத் தலைமுறையினருக்கும் உணர்த்தி அவர்களின் உள்ளங்களில் தாய்மொழிப் பற்றை விதைப்போம்.

மொழிஞாயிறு பிறந்த நாள்

தேவநேயப் பாவாணர் பிறந்த நாள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

சென்னை, பிப். 7: செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தேவநேயப் பாவாணர் தம் வாழ்நாள் கடமையாக எண்ணி உழைத்தார் என முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு:

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாள்; தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர், செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறை தமிழ் மலையாம் மறைமலையடிகள்; நானே மரமாக வளர்த்து வருகிறேன் எனத் தம் தமிழ்ப் பணியை மதிப்பிட்டார் பாவாணர்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தம் வாழ்நாள் கடமையாக எண்ணி உழைத்தார். இந்திய மொழிகளிலேயே வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பாகத் தமிழின் தனித்தன்மையைப் பேணிக் காத்திட்ட தனித்தமிழறிஞர் பாவாணர் வாழ்க எனத் தெரிவித்துள்ளார்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் 124ஆம் பிறந்தநாளையொட்டி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் உள்ள பாவாணரின் திருவுருவச் சிலைக்குத் தமிழன்பர்கள், அகரமுதலி இயக்கக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மாலை அணிவித்துப் புகழ் வணக்கம் செலுத்தினார்கள்.

தமிழியக் குடும்பமொழிச் சொல்லாட்சிகள்

முனைவர் இரா.கு.ஆல்துரை
தமிழ்நாட்டரசின் வீரமாமுனிவர் விருதாளர்

குடும்ப மொழிகள்

மொழிகளுக்கிடையே இனவடிப்படையில் தொடர்புண்டு எனக் கண்டறிந்து மொழிகளைக் குடும்பங்களாகப் பிரித்துக் காட்டியது மொழி ஆய்வு வரலாற்றில் ஒரு பெரும் கண்டுபிடிப்பாகும். இனவடிப்படையில் ஒரு குடும்ப மொழிகளுக்கிடையே பல்வேறு நிலைகளில் ஒற்றுமை காணப்படுகிறது. இனமொழி களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வரலாற்றுத் தொடர்புடையது. இனமொழிகளின் நூற்றுக் கணக்கான சொற்கள் பொதுத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன. அதிலும் அடிப்படைச்சொற்களில் ஒப்புமை காணப்படுகின்றது. பெயர்ச்சொல், வினைச்சொல், மாற்றுப்பெயர் ஆகியனவற்றில் பொதுத்தன்மை காணப்படுகின்றது. துணைவினை, ஒட்டுப் போன்றவற்றிலும் ஒற்றுமை நிலவுகின்றது. சொற்கள் பலுக்கத்தில் இனமொழி களுக்கிடையே ஒப்புமை இருக்கின்றது. திரிபுபெற்ற இனச்சொற்களிலும் ஒழுங்கான ஒலிப்பு ஒப்புமையைக் காணலாம். இவைபோன்று பல நிலைகளில் ஒரு குடும்ப மொழிகளுக்கிடையே இனத்தொடர்பில் அமைந்த ஒப்புமைகள் பல காணப்படுகின்றன. இவ்வகையில் தமிழியக் குடும்ப மொழிகளுக்கிடையே ஒப்புமைகள் பல நிலைகளில் காணப்படுகின்றன.

ஒருபொருட் பன்மொழி

"ஒரு பொருளைக் கூர்ந்து நோக்கும் மனத்திற்குப் படும் சிறப்புக்கூறு அப் பொருளுக்குரிய பெயராய் அமைந்து விடுகிறது. அவ்வகையில் சமற்கிருத அகரமுதலிகள் கைக்கு 5, ஒளிக்கு 11, மேகத்திற்கு 15, திங்களுக்கு 20, பாம்புக்கு 26, கொல்வதற்கு 33, நெருப்புக்கு 35, ஞாயிறுக்கு 37 சொற்கள் இருப்பனவாகக் குறித்துள்ளன. ஞாயிற்றை ஒளிப்பொருந்தியது, வெப்பமானது, பொன்போன்றது, காப்பது, அழிப்பது, ஒநாய், அரிமா, மேலுலகக்கண், ஒளியின் தந்தை, வாழ்வின் தந்தை எனக் குறிப்பிடலாம். இவ்வகையில் பழங்கால மொழியில் ஒருபொருட் பன்மொழிகள் பேரளவில் இருந்துள்ளன. இவற்றுள் வலிமையற்ற, குறைந்த சுவை தருகிற, வளமைக் குறைந்த சொற்கள் காலவோட்டத்தில் வழக்கு வீழ்ந்து விடுகின்றன. இவற்றுள் ஏதாவது ஒன்று வெற்றி பெற்றுவிடுகிறது" (Max Muller 1965:400). இவ்வகையில் வழக்கு வீழ்ந்துள்ள சொற்கள் போகத் தமிழில் ஒரு பொருட் பன்மொழிகள் பல இருக்கின்றன என்பது இவற்றிற்கு முன் இன்னும் மிகுதியான ஒருபொருட் பன்மொழிகள் தமிழில் இருந்துள்ளன என்பதைக் காட்டுகிறது. தமிழின் சொல்வளத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, தமிழ் வாழிடத்தைக் குறிக்கும் வீடு என்னும் சொல்லுடன் தெலுங்குச் சொல் இல் என்பதையும், கன்னடச் சொல் மனை என்பதையும் சமற்கிருதச்சொல் குடி என்பதையும் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுவார் கால்டுவெல் (Caldwell 1987:82). அதாவது தமிழில் ஒருபொருட் பன்மொழிகளாக இருக்கும் சொற்கள் தமிழியக் குடும்ப மொழிகள் ஒவ்வொன்றில் ஒவ்வொன்றாக இருப்பதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

திசைச்சொற்கள்

தமிழிலுள்ள பெரும்பான்மையான சொற்கள் தமிழியக் குடும்ப மொழிகளில் இருக்கின்றன. இருந்தாலும் தமிழ் வழக்கில் இல்லாத தமிழியக் குடும்பச் சொற்கள் பல தமிழியக் குடும்பமொழி வழக்குகளில் இருக்கின்றன. பழங்காலத்துக் கொடுந்தமிழே இன்றைய தமிழியக் குடும்ப மொழிகள். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களுள் திசைச் சொற்களே கொடுந்தமிழ்ச் சொற்கள் என்பார் பாவாணர். திசைச் சொற்களை அல்லது தமிழியக் குடும்பமொழிச் சொற்களை 1.) பொருள் திரிந்த சொல், 2.) வடிவு திரிந்த சொல், 3.) புதுச்சொல் என்று மூவகைப்படுத்தி விளக்குவார் அவர். மேலும், புதுச்சொற்களைத் தமிழில் மறைந்த வேர்ச்சொல்லையுடையன, மறையா வேர்ச்சொல்லையுடையன என்று இருவகையாகப் பிரிப்பார் அவர் (பாவாணர் 1964 முன்.11). இவ்வகைப் பகுப்பில் தமிழியக் குடும்ப மொழிச் சொற்களுள் அடிப்படையானவை அனைத்தையும் அடக்கிவிடலாம்.

"திசைச்சொல் என்பன, செந்தமிழ் நிலத்து வழங்காது கொடுந்தமிழ் நிலங்களில் மட்டும் வழங்கியதிருந்தியசொற்களும்சொல்வழக்குகளும்

ஆகும்" (பாவாணர் 1968:2). திசைச்சொற்கள் செந்தமிழ் நாட்டில் வழங்காதவை என்று சொல்லும்போது செந்தமிழ் நாட்டில் வழங்காத சொற்கள் தமிழியக் குடும்ப மொழிகளில் இருக்கும் என்பது வெளிப்படையாகிறது. அச்சொற்களைத்தாம் பவாணர் தமிழில் மறைந்த வேர்ச்சொற் களினின்று உருவானவை என்றும், மறையாத வேர்ச்சொற்களினின்று உருவானவை என்றும் வகைப்படுத்தி யுள்ளார். எவ்வாறு இருந்தாலும் தமிழில் வழங்காத தழியக் குடும்ப மொழிச்சொற்கள் தமிழல்லாத பிற தமிழியக்குடும்ப மொழிகளில் இருக்கின்றன என்பதை இது உணர்த்துகிறது. அதுவும் திசைச்சொல் பாகுபாட்டைக் குறிப்பிட்டதிலிருந்து தொல்காப்பியர் காலத்திலிருந்தே செந்தமிழில் வழங்காத சொற்கள் இருந்தன என்பதையும் உணர்த்துகிறது. தமிழிய மொழிக் குடும்பத்தின் தமிழியக் கூறுகள் பெரும்பாலானவற்றைக் கொண்டது தமிழ். தமிழியக் குடும்ப மொழிகளுள் பழைமையான இலக்கியங்களைக் கொண்டது தமிழ். ஏறக்குறைய கடைக்கழகக் காலத்திற்குப் பின்னர்தான் தமிழல்லாத பிற தமிழியக் குடும்ப மொழிகள் உருவாக்கம் பெற்றுள்ளன. அவ்வாறிருக்கும்போது கழகக் காலத்தமிழ் தமிழியக்குடும்ப மொழிகளுக்கு முந்துவடிவமாக இருக்க வேண்டும். ஆகையால் கழகக்காலத் தமிழ் அல்லது பழந்தமிழ் வழி நின்று தமிழியக்குடும்ப மொழிகள் திரிந்த தன்மைகளைக் காட்டுதல் வரலாற்று நோக்கில் பழைமை யானதை முன்னும் பிற்காலத்திற் குரியதைப் பின்னும் வைத்து ஆய்வதாக இருக்கும்.

பாவாணர் தமிழை இயன்மொழி என்றும் பிற தமிழியக் குடும்ப மொழிகளைத் திரிமொழிகள் என்றும் குறிப்பிட்டுள்ளது நினைவுகூரத் தக்கதாகும். இயன்மொழி என்பது இயல்பாய் அமைந்த மொழி. இயன்மொழி யிலிருந்து திரிந்தவை திரிமொழிகள். இயன்மொழி காலத்தால் முந்தியது. திரிமொழி காலத்தால் பிந்தியது. திரிமொழிகளின் திரிபுகளைச் செம்மைப் படுத்தினால் அவையாவும் இயன்மொழி களாக நிலவும் தன்மை பெறுகின்றன.

முந்து தன்மை

ஒப்புமொழியியல் இனமொழிகளை ஆராய்ந்து அவற்றின் முந்துமொழியை மீட்டுருவாக்கம் செய்வதற்கு வழிவகை செய்கிறது. தமிழல்லாத பிற தமிழியக் குடும்ப மொழிகளில் உள்ள திரிபுகளைச் சரிசெய்தால் அவையாவும் பழந்தமிழாய் காட்சி யளிக்கும். இவ்வாறான நிலையை உணர்ந்துதான் மீட்டுருவாக்கம் செய்வது எல்லா இனமொழிகளுக்கும் தேவை இல்லை என்கின்றனர். முந்துமொழி எழுத்து வடிவமாக இல்லாத நிலையில்தான் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது என்றும் முந்து வடிவம் எழுத்துவடிவமாக இருக்கின்ற நிலையில் அவ்வெழுத்துத் தன்மையைக்கொண்டு முந்து தன்மையை அறிந்து கொள்ளலாம் என்றும் குறிப்பிடுவார் அமெரிக்க நாட்டு மொழியியலறிஞர் புளூம்பீல்டு. இவ்வடிப் படையில் உரோமன்சு மொழிகளுக்குப் பழம் இலத்தீன மொழி முந்துமொழியாக இருப்பதால் இலத்தீனத்தின் பழைமையான இலக்கியங்களைக் கொண்டு அவற்றின் முந்து நிலையை அறியலாம் என்பார் அவர் (Bloomfield 1933:298). இதை வைத்துப் பார்த்தால் தமிழின் பழைமையான இலக்கிய இலக்கணங்கள் தமிழியக் குடும்ப மொழிகளின் முந்து தன்மையைக் காட்டுவன வாகும் எனக் கொள்ள வேண்டும்.

புதுச்சொற்கள்

ஒருமொழி பேசும் மக்களிடையே பலவகையான புதிய கருத்துகளும் புதிய பொருள்களும் காலந்தோறும் சேர்ந்த வண்ணமாய் இருக்கின்றன. இந்தப் புதிய கருத்துகளையும் பொருள்களையும் குறிக்க அம்மொழி பேசும் மக்கள் புதிய சொற்களை உருவாக்கிக் கொள்கின்றனர். ஆனால் புதியதாக உருவாக்கப்பட்ட சொற்கள் அனைத்தும் அம்மொழி வழக்கிலிருந்த பழைய வடிவங்களிலிருந்து உருவாக்கப்பட்டனவாக இருக்கும். இது யாராலும் தம் விருப்பப்படி முழுவதும் புதியதான சொல்படைக்க இயலாது என்னும் நெறிமுறைக்கு உட்பட்டதாகும். இக் கருத்தடிப்படையில் பார்த்தால் தமிழியக் குடும்ப மொழிகளின் முந்துவடிவமாகக் கொள்ளத்தக்க பழந்தமிழ் வடிவங்களின் அடிகளினின்று தமிழியக் குடும்ப மொழிகளின் புதிய சொற்கள் அமைந்திருக்கும் என்பது வெளிப்படையாகிறது. அதாவது தமிழியக் குடும்ப மொழிகளில் உருவான புதிய சொற்கள் பழந்தமிழ் வடிவங்களினின்று உருவானவையாக இருக்கும். இத்தன்மைகளுடன் நூற்றுக்கணக்கான சொற்கள் தமிழியக் குடும்ப மொழிகளில் இருக்கின்றன. இவையல்லாமல் மூல மொழிச்சொற்கள் தமிழியக் குடும்ப மொழிகளில் ஆயிரக்கணக்கானவை இருக்கின்றன. இவ்வாறான சொற்களை 1.) பொருள் திரிந்த சொல், 2.) வடிவு திரிந்த சொல் என இருவகையாகப் பிரித்து விளக்குவார் பாவாணர்.

பொருள் திரிந்த சொல்

எ–டு: தமிழ் ஞாயிறு துளுமொழியில் நெசீரி என்று காலைப்பொழுதைக் குறிக்கிறது. தமிழ் நிலவு, நிலா தெலுங்கு மொழியில் நெல என்று மாதத்தைக் குறிக்கிறது. தமிழில் நிலவைக் குறிக்கும் திங்கள் என்னும் சொல் மாதத்தைக்

குறிப்பது போல் தெலுங்கு நெல மாதத்தைக் குறிப்பது கவனிக்கத் தக்கது. கன்னடத்தில் திங்கள், திங்களு என்று நிலவு, மாதம் ஆகிய இரண்டையும் குறிக்கிறது.

வடிவு திரிந்த சொல்

இவ்வகைச் சொற்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. திரவிடச் சொற்பிறப்பு அகரமுதலி திரிபுகளைத் தெளிவாகக் காட்டுகிறது. திரிபுகளை மொழிமுதல், மொழியிடை, மொழியிறுதி என்றாற்போன்றும் இடம்பெயரல், தோன்றல், திரிதல், கெடுதல், என்றாற் போன்றும் வகைப்படுத்திக் காட்டலாம். அதிலும் தமிழியக்குடும்ப மொழிகளுள் ஏதாவது இரண்டினை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றிற்கிடையே காணப்படும் திரிபுகளை வகைப்படுத்திக் காட்டுவது தெளிவாக இருக்கும். தமிழியக் குடும்ப மொழிகளுள் பழைமையானதான தமிழுடன் பிறமொழி ஒவ்வொன்றையும் ஒப்பிட்டு இவ்வகைத் திரிபுகளை வகைப்படுத்துவது திரிபுகளின் தன்மையை முழுவதும் காட்டுவதாக இருக்கும். பாவாணர் தம் திரவிடத்தாயில் இவ்வகைத் திரிபுகளைப் பட்டியலிட்டுள்ளார். தமிழியக் குடும்ப மொழியியல் வல்லுநர்கள் மொழியியல் அடிப்படையில் திரிபுகளைக் காட்டியுள்ளனர். இம்மொழிகளின் திரிபுகளை நெறிகளாக்கும் தன்மையைக் கால்டுவெல் காட்டியுள்ளார் (Caldwell 1987:136–150).

1.) தமிழ் – ஐ; மலையாளம், தெலுங்கு – அ; கன்னடம் – எ;
2.) தமிழ், மலையாளம், தெலுங்கு – ச்; கன்னடம் – க்;
3.) பலமொழிகளில் – ப்; கன்னடம் – ஹ்;
4.) தமிழ், மலையாளம் – ழ்; கன்னடம் – ள்; தெலுங்கு – ட்; துளு – ர்;

இவைபோன்று வடிவு திரிந்த சொற்களை வகைப்படுத்தி விளக்கியுள்ளனர் தமிழியக் குடும்ப மொழியியலாளர்கள். எமனோவின் திரவிட ஒப்புமை ஒலியியல் ஒரு மாதிரி என்னும் நூலும் கமில் சிவலபில்லின் ஒப்புமை திரவிட ஒலியியல் என்னும் நூலும் தமிழியக் குடும்ப மொழிகளில் காணப்படும் திரிபுகளைச் சுருக்கமாகக் காட்டு கின்றன. சுப்பிரமணியத்தின் திரவிட ஒப்புமை ஒலியியல் என்னும் நூல் இவ்வகைத் திரிபுகளை விரிவாகக் காட்டுகிறது.

பாவாணர் திரிபுகளுக்குத் தமிழ் நரம்பு, மலையாளம் ஞரம்பு; தமிழ் வேடர், கன்னடம் பேடரு (b); தமிழ் எவன், தெலுங்கு எவடு; தமிழ் ஒருவன், துளு வோரி என்பன போன்ற பல சொற்களைக் காட்டியுள்ளார். இவ்வகையில் தமிழ் கண், தெலுங்கு கன்னு; தமிழ் ஆப்பி (மாட்டுக்கழிவு), துளு அம்பி; தமிழ் மூன்று, மலையாளம் மூன்னு, கன்னடம் மூரு, தெலுங்கு மூடு, துளு மூஜி; தமிழ் கூடு, கன்னடம், தெலுங்கு, துளு கூடு போன்றவற்றை எடுத்துக் காட்டிற்குக் காட்டலாம். தமிழ் கூடு பிற தமிழியக்குடும்ப மொழிகளில் கூடு (g) என்றாவது போல் ஒலிப்பில்லா ஒலி ஒலிப்பு ஒலியாக மாறுவதையும் தமிழியக் குடும்ப மொழியிய லாளர்கள் வகைப்படுத்திக் காட்டியு ள்ளனர்.

புத்தாக்கம்

இவ்வகைச் சொல்லை மறைந்த வேர்ச்சொல் (எ–டு: அம்மு தெலுங்கு = வில்), மறையா வேர்ச்சொல் (எ–டு: அள் (காது) தெலுங்கு அடுகு) என இருவகைப்படுத்திக் காட்டுவார் பாவாணர்.

கன்னடம், சலமெ, சலுமெ (சிறுகுழி, ஊற்று); தெலுங்கு செலம (கிணறு); கன்னடம் ஒலுமெ (அன்பு, பாசம்), கொப்பர (எரு) போன்றவற்றை இவ்வகைச் சொற்களுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

வைப்புப் பொருள்

தமிழ் சொல்வள மிக்க மொழி என்பதில் ஐயமில்லை. ஆனால் பழந்தமிழில் இருந்த சொற்கள் அனைத்தும் பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன என்று சொல்வதற்கில்லை. இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சொற்கள் சில ஆயிரக்கணக்கின. பழந்தமிழில் இருந்த சொற்கள் பெரும் எண்ணிக்கையின. இம்மொழிச் சொற்களில் பெரும்பாலானவை வைப்புப்பொருள்களாக இருந்துள்ளன. பாவியம் படைத்த புலவர்கள் சில வாயிரம் சொற்களையே பயன்படுத்தி யிருக்கின்றனர். உலகளாவிய பொருண்மை பற்றி எழுந்த திருக்குறளில் 4314 சொற்கள் தாம் ஆளப்பட்டுள்ளன. இவ்வாறிருக்கும்போது இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள சொற்களை மட்டும் பழந்தமிழ்ச் சொற்கள் என்று கொள்வதற்கில்லை. இது வல்லாமல் தமிழ் இலக்கியங்கள் பல காலவெள்ளத்தில் அழிந்து போயின. அவற்றில் கிடைத்துள்ள இலக்கியங்களில் இடம்பெறாத சொற்கள் பல இடம்பெற்றிருக்கக் கூடும். ஆகையால் இன்று தமிழில் வழங்காமல் பிற தமிழியக்குடும்ப மொழிகளில் வழங்கும் தமிழியச் சொற்கள் பல இவ்வகையில் பழந்தமிழில் இருந்தன என்று கொள்ளலாம்.

பூனையைக் குறிக்கும் கன்னடச்சொல் கொத்தி, மலையாளச்சொல் கொற்றி ஆகியவற்றிற்கு விளக்கம் தரும் போது "கொத்தை (கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பன (தொல்.

வேற்.11, இளம். உரை). கொத்தி என்னும் கன்னடச்சொல் கொத்தை யென்னும் தமிழ்ச் சொல்லைப் பெரிதும் ஒத்துளது. தமிழில் இச்சொல் இறந்துபட்டது. பழஞ்சேர நாட்டுத் தமிழின் (வடசொற் செறிந்த) திரிபே மலையாள மாதலால், கொற்றி என்பதைத் தமிழாகக் கொள்ளலாம்" என்பார் பாவாணர்.

தமிழில் பூனையைக் குறிக்கும் சொல்லான பூசை என்பது படகு மொழியில் கண்ணுடன் சேர்த்து பூசைக்கண் என்று பூனைக்கண் போன்று இருக்கும் கண்ணைக் குறிக்கிறது. இங்குப் பூனையைக் குறிக்கப் பூசை என்னும் சொல் தனியாக ஆளப்படுவதில்லை.

கலைச்சொல்

புதியதாகச் சொல் படைக்கும் பொழுது குடும்ப மொழிகளுள் ஒரு மொழி பேசுவோர் பிறமொழியாளர்களிட மிருந்து வேறுபட்டுப் படைக்கும் நிலை ஏற்படுகிறது. எ–டு: கன்னடத்தில் தட்டச்சிற்குப் பெரலச்சு (விரலச்சு) என்று சொல் படைத்துள்ளனர். தமிழ்த் தட்டச்சு, கன்னட பெரலச்சு ஆகிய இரண்டும் இவ்விரு மொழிகளுக்கும் பொருந்துவனவாக உள்ளன. இதே போல் துடவச் மொழியில் மிதிவண்டிக்குக் காலாடி என்று சொல் படைத்துள்ளனர். தமிழ் மிதிவண்டி, துடவமொழி காலாடி ஆகிய இரண்டும் இவ்விரு மொழிகளுக்கும் பொருந்துவனவாக இருக்கின்றன.

வேர், ஆக்க ஈறு

"ஒப்பியன்மொழியியலில் பெயரடியை அல்லது வினையடியை வேர் என்றும் ஆக்க ஈறு (அல்லது பின்னொட்டு) என்றும் பகுத்து ஆய்வது இன்றியமையாதது. தமிழியக் குடும்ப மொழிகளுள் வடிவத்திலும் பொருளிலும் ஒரு பகுதி ஒத்துவரும் அடிகளை அல்லது சொற்களை ஒப்புமைப்படுத்தினால் எல்லா மொழிகளிலும் முதல் பகுதி பொதுவானதாக இருக்கும். இந்தப் பொதுவானதாக உள்ள பகுதி இரண்டு அல்லது மூன்று அல்லது மிக அருகி நான்கு ஒலிகள் உள்ளதாக இருக்கும். இது வேர் என்றழைக்கப்படும். வேருக்குப்பின் வரும் எஞ்சிய பகுதி ஒப்புமையில்லாமல் இருக்கும். இது ஆக்க ஈறு அல்லது பின்னொட்டு என்றழைக்கப்படும்" (Subrahmanyam 1983:13). இந்த வகையில் தமிழியக்குடும்ப மொழிகளில் பெரும்பாலான சொற்கள் ஒப்புமை யுடையனவாக இருக்கும். இவ்வாறு தனிச்சொல்லில் அல்லாமல் கூட்டுச் சொல்லிலும் ஒரு பகுதி ஒத்தும் மீதி மாறியும் வருகின்றன.

கூட்டுச்சொல்

கூட்டுச்சொல் உருவாக்கத்தில் இனமொழிகளுக்கிடையே வேறுபட்ட அமைப்பு இருப்பதைக் காணலாம். கூட்டுச்சொல்லின் சொற்கள் குடும்ப மொழிகளுள் இரண்டு அல்லது பல மொழிகளில் இருக்கும். ஆனால் அவற்றின் சேர்க்கை வெவ்வேறு வகையாக இருக்கும்.

எ–டு: மனெ என்னும் கன்னடச்சொல் தமிழ் வழக்கைப்போல் இல்லாமல் பிற சொற்களுடன் சேர்ந்து பல கூட்டுச்சொற்களை உருவாக்கியுள்ளது. மனெ கர்ச்சு (வீட்டுச் செலவு), மனெ கட்டு (வீடு கட்டு), மனெ கத (வீட்டுக் கதவு), மனெ காப்பு (வீட்டுக் காவல்), மனெ கெலச (வீட்டு வேலை), மனெ தெறிகெ (வீட்டுவரி), மனெ தேவ (வீட்டுத்தெய்வம்), மனெ தொத்து (வீட்டுப்பணிப்பெண்), மனெ பதுக்கு (வீட்டுப்பணி, வீட்டுச் சொத்து), மனெ பாடிகெ (வீட்டு வாடகை), மனெ பேசாய (சொந்த வேளாண்மை), மனெ மாடு (வீடு கட்டு), மனெ முட்டு (வீட்டு ஏனங்கள், அறைக்கலன்கள்), மனெயவ (வீட்டைச் சேர்ந்தவன்), மனெயவளு (வீட்டுப்பெண்), மனெயளிய (மாமனார் வீட்டோடு இருக்கும் மாப்பிள்ளை), மனெயாளு (வீட்டுப்பணிப்பெண்), மனெ பாகில் (வீட்டுக் கதவு), மனெதன (குடும்பத்தினர், குடும்ப அமைப்பு).

இல் என்னும் சொல் தெலுங்கில் இல், இல்லு என்றும் வேற்றுமை ஏற்கும்போது இண்டி, இண்டிக்கி, இண்டிலோ அல்லது இண்ட என்பனபோல வடிவம் கொள்ளும். அங்கு இல் வீடு, கூடம், அறை, இனம், குடும்பம், கட்டம், சதுரக்கட்டம் ஆகிய பொருள்களுடன் இருக்கிறது. இல்லட்ட (வாழ்விடம்), இல்லட்டமு (மாமனார் வீட்டின் வாழ்விடம்), இலுவரமு, இலுவாரமு (சுவர் இல்லாமல் எழுப்பும் குடிசை), இல்லாலு (மனையாள்), இல்லரி (வீட்டு வரி), இண்டிகாபு (குடும்பத்தலைவர், திருமணமானவர்), இண்டி பட்டு (வீட்டிற்கு அருகிலுள்ள இடம்), இண்டிபாப (அடிமைப்பெண்), இண்டி பேரு (குடும்பப் பெயர்), இண்டியாதடு (கணவன்) என்பன போன்று சொல்லாக்கங்கள் பெறுகின்றன.

துளு இல்லட், இல்லாட் (வீடு, வாழிடம்), இல் இட் (வீடும் சொத்தும்), இல்தீர்வை (வீட்டுவரி), இல்தெரிகெ (வீட்டுவரி), இல்நில் (வாழிடம்), இல்லடி (வீட்டுமனை), இல்லடித்தாய (குடும்பப்பெயர்), இல்லரத்தன, இல்லரத்தாணொ (சொந்த வீடு, வளமனை), இல்லொக்கல் (புதுமனை புகுவிழா).

மலையாளம் வீடு, வீடகம் (வாழிடம்), வீடன் (தலைவன், கணவன்), வீடாரம் (வீடு), வீட்டதிகாரி (கண்காணிப்பாளர்), வீட்டின் பெண் (வீட்டுப்பெண்),

வீட்டுக்காரன் (குடும்பத்தார்), வீட்டுக்காரி (மனைவி), வீட்டுக்காய்யம் (குடும்பச்செய்தி), வீட்டுப்பேர் (குடும்பப்பெயர்), வீட்டுப்பட்சி (ஊர்க்குருவி), வீட்டுமுறி (வீட்டிலுள்ள அறை).

கன்னடம் பீடு, பீடிகெ, பிதர, பீதர (சாவடி, வீடு); தெலுங்கு வீடு (நகரம், சாவடி), துளு பீடு, பூடு (ஊர்த்தலைவர் வாழிடம்).

தமிழில் ஒருபொருட்பன்மொழிகளாக உள்ள மனை, இல், வீடு என்பன தமிழியக் குடும்ப மொழிகளில் வருகின்றன என்றலும் அவை அம்மொழிகளில் வெவ்வேறு வகையில் கூட்டுச்சொற்களை உருவாக்கியுள்ளன.

குட்டிநர (இளநரை), குட்டிகாலம் (இளமைக்காலம்), குட்டித்தரம் (முதன்மை இடம்பெறாதது, இரண்டாம் நிலையில் இருப்பது), குட்டிப்புரம் (சிறுகுடிசை), குட்டியுடுப்பு (சிறுவர் ஆடை), குட்டிக்களி (சிறுவர் விளையாட்டு) போன்ற மலையாளச்சொற்களில் வரும் குட்டி, நரை, காலம், தரம், புரம், உடுப்பு ஆகிய சொற்கள் தமிழ், மலையாளம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இருக்கின்றன. ஆனால் மலையாளத்தில் இச்சொற்கள் சேர்ந்து கூட்டுச்சொற்கள் உருவானது போன்று தமிழில் உருவாகவில்லை. குட்டி என்னும் சொல்லிற்குத் தமிழில் இளமை, சிறியது போன்ற பொருள்கள் இருக்கின்றன. என்றாலும் இச்சொல் நரை, காலம், தரம், புரம், உடுப்புப் போன்ற சொற்களோடு சேர்ந்து கூட்டுச்சொல் உருவாகவில்லை.

வேறுபட்ட இலக்கண அமைப்பு

சில சொற்கள் தமிழ் மொழியிலும் தமிழியக்குடும்ப மொழிகளிலும் வெவ்வேறு இலக்கண அமைப்பில் இருக்கின்றன. ஒன்றில் பெயராக இருப்பது மற்றொன்றில் வினையாக அல்லது வினையாகவும் பெயராகவும் இருக்கும்.

எ–டு: தமிழில் 'மாசு' என்னும் சொல் பெயர் வடிவத்தில் மறு, அழுக்கு, குற்றம், முறைகேடு, கருமை, இருள், நஞ்சுக்கொடி, கோழை போன்ற பொருள்களுடன் இருக்கிறது. இச்சொல் வினையாகத் தமிழ் வழக்கில் இல்லை. ஆனால் 'மாசு' கன்னட மொழியில் கறை, குற்றம், நஞ்சுக்கொடி போன்ற பொருள்களுடன் பெயராக இருக்கிறது. மங்கலாக்கு, அழுக்காக்கு, கறைபடியவை போன்ற பொருள்களுடன் வினைவடிவத்தில் வழக்கில் இருக்கிறது. படகு மொழியில் 'மாசு' என்னும் சொல் அழுக்காக்கு என்னும் பொருளில் வினைவடிவத்தில் வழங்கப்படுகிறது. நஞ்சுக்கொடி என்ற ஒரே பொருளுடன் பெயர் வடிவத்தில் இச்சொல் அங்கு இருக்கிறது.

ஒட்டு

ஒட்டு வெவ்வேறு சொற்களுடன் இணைந்து தமிழியகுடும்ப மொழிகளில் வெவ்வேறு சொற்கள் உருவாகின்றன. எ–டு: தமிழில் பயந்தாங்கொளி, ஏமாங்கொளி என்னும் சொற்களில் 'கொளி' (கொள்+இ) என்னும் ஒட்டுச் சேர்ந்துள்ளது. கொளி என்னும் ஒட்டு படகு மொழியில் அஞ்சுகுளி (பயந்தாங்கொளி), அவ்வுகுளி (அழும் இயல்புள்ளவன்), ஜிள்ளுகுளி (கிள்ளும் இயல்புள்ளவன்) என்பன போன்ற சொற்கள் உருவாக இடம் அளித்துள்ளது.

தமிழினின்று பிற தமிழியக் குடும்ப மொழிகள் வேறுபடக் காரணங்களாகப் பன்னிரண்டைக் காட்டுவார் பாவாணர் (1964: முன்.19–21). அவற்றுள் 1.) எழுத்தொலித் திரிபு, 2.) சொல்திரிபு, 3.) பொருள்திரிபு, 4.) இயற்கைதெரிப்பு, 5.) வழக்கற்ற சொல் வழங்கல், 6.) புத்தாக்கச்சொல் ஆகியவற்றை முதன்மையான காரணங்களாகக் கொள்ளலாம். தமிழில் இடம்பெறாத ஏனைய தமிழியக் குடும்ப மொழிச் சொல்லாட்சிகளுள் பெரும்பாலானவற்றை இவ்வகைப்பாட்டில் அடக்கிவிடலாம். இவற்றுடன் கூட்டுச்சொல் அமைப்பின் மூலம் தமிழ் வழக்கில் உருவாக்கம் பெறாத சொற்கள் பல தமிழல்லாத பிற தமிழியக் குடும்ப மொழிகளில் உருவாக்கம் பெற்றுள்ளன.

குறிப்புதவி நூல்கள்

1.) பாவாணர், 1964, திரவிடத்தாய், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, (முதற்பதிப்பு 1944)

2.) பாவாணர், 1967, வடமொழி வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி

3.) பாவாணர், 1968, வண்ணனை மொழி நூலின் வழுவியல், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி

4.) Bloomfield, Leonard, 1996, Language, Motilal Banarsidas, Delhi (first published 1933)

5.) Caldwell, Robert, 1987, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES, New Delhi (first published 1913)

6.) Emeneau, M.B., 1970, Dravidian Comparative Phonology, A Sketch, Annamalai University

7.) MaxMuller, F., 1965, Lectures on The Science of the Language, Munshi Ram Manoharlal , New Delhi (first published 1861)

8.) Subrahmanyam, P.S., 1983, Dravidian Comparative Phonology, Annamalai University

9.) Zvelebil, Kamil , 1970, Comparative Dravidian Phonology, The Hague, Paris

நாற்றிசைப் பெயராக்கம் நுட்ப விளக்கம்

இரா. திருமாவளவன்
தேசியத் தலைவர்,
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்

தமிழர் திசைகளுக்கு அருந்தமிழால் பொருள் பொதிந்த பெயர் சூட்டியுள்ளனர் என்பதைச் சொல்லாய்வார் அறிவர்.

வடக்கு
தெற்கு
மேற்கு
கிழக்கு

என்றும் உத்தரம், குடக்கு, குணக்கு , தக்கணம் என்றும் அவற்றைக் குறிப்பிடுவர். இவற்றுள், வடக்கு, கிழக்கு, மேல், கீழ், குணக்கு, மேற்கு என்பன பழம்பெயர்களே.

தமிழர்கள் திசைகளுக்கும் இனிய காரணப் பெயர்களை வைத்துள்ளனர். மேற்குத் திசை என்று சொல்வதற்குக் காரணம், தமிழ்நாட்டின் மேற்குத் திசையில் உயர்ந்த மலைகள் இருந்தன. அந்நிலப் பகுதி மேல் நோக்கி உயர்ந்து இருந்தமையால் அதற்கு மேல் திசை, மேற்குத் எனப் பெயர் இடப்பட்டது. அதற்கு எதிர்ப்புறமாக இருப்பது கீழ் நோக்கிச் சென்றமையால் அது கீழ்த் திசை, கிழக்குத் திசை எனப்பட்டது. இனி, வட திசை என்றது, வட்டமான வட மரம் அங்கு அதிகம் காணப்பட்டதன் காரணமாகவே அது வடதிசை எனப்பட்டது. வடமரம் என்றது உண்மையில் ஆலமரமாகும். ஆல மரம் வட்ட வட்டமாக இருப்பதால் , வட்ட மரம் எனச் சொல்லப்பெற்று, பின்னர் வடமரமாகியது. வட திசைக்கு நேர் எதிர்ப்புறம் தென் திசையாகும். வடக்கே மரம் அடையாளமாக இருந்ததால் தெற்கேயும் மரமே அடையாளமாக இருந்தது. ஆம் தென்திசையில் தென்னை மரம் அதிகமாக இருந்தமையால் தென் திசை, தெற்குத் திசை எனப் பெயரிடப்பட்டது. தென்னை மரம் ஓங்கி வளரும். ஓங்கி வளர்ந்து சற்று வளைந்து தோன்றும் . தென்னைக்குத் தென்னை எனும் பெயர் அது வளைந்து தோன்றுவதால் ஏற்பட்டது. இப்படித்தான் தமிழில் திசைப்பெயர்கள் வைக்கப்பட்டன.

சிந்து வெளி நாகரிகப் பண்பாட்டு மொழிக் கூறுகளை ஆய்வு செய்த அறிஞர் திரு. பாலகிருட்டிணன் அவர்கள்...மேற்கு கிழக்கு எனும் திசைப்பெயர்களையும் , உயர்விடம் தாழ்விடம் எனும் பொருளில் இடச் சூழல்களையும் ஆய்வு செய்து இந்திய துணைக்கண்டம் முழுக்க பரவியிருந்த திரவிட மொழி தமிழே என்றும் சிந்து வெளி மொழி தமிழே என்றும் நிறுவுகின்றார். இந்தியாவின் இடப்பெயர்கள் பலவும் தமிழே..என கணினி இணைய கூகல் வரைபட துணையுடனும் நிறுவியிருக்கின்றார். அந்நூலில் படவத் திசை என்பது மேற்குத் திசையைக் குறிக்கும் சொல் எனப் பதிவிட்டுள்ளார்.

மேற்கு திசை> நில அமைப்பு... உயர்வாகவும் மலைப்பகுதியாகவும் இருந்தமையால்...மேல் நோக்கி இருக்கும் திசைப்பகுதி எனும் பொருளில் மேற்குத் திசை எனச் சொல்லமைக்கப் பெற்றது. . மேல், மேலை, மேற்கு முதலான சொற்கள் உயர்ந்த இடம் எனும் பொருளையே குறிக்கும். எனவே அவ்வுயர் பகுதியில் அமைந்த இடங்கள், நாடுகள் மேல் , மேற்கு , மேலை என்றே குறிக்கப்பட்டன. அவற்றுள் வாழும் மக்கள் , மேலை மக்கள், மேற்கத்தியர், மேலையர் எனப்பட்டனர். அவர்கள் பேசும் மொழி மேலை மொழி ஆயிற்று.

மேல் திசை – மேற்குத் திசை , "மேல்திசை வாயில் வறியேன் பெயர்கென" (சில : 23:183)
மேல் பால் = மேற்குப் பக்கம், "பகல் இழந்த மேல் பால் திசைப்பெண் புலம்புறு மாலை" (சட: வி: 35)

மேற் கடல் = மேற்குத் திசையிலுள்ள ஆழி : "மன்னு வெங் கதிர் மீ தெழும் மறித்து மேற்கடல்" (பெரிய : 1157)

மேற்கு – மேற்குத் திசை: "தென் மேற்காகத் தாது அணி பூம் பொழில் தான் சென்று எய்தலும்" (மணி : 28:175).
மேற்றிசை = மேற்கு , "மேற்றிசைக்குங் கிழக்குத் திசை எட்டொடு மாற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே" (மூல : 35)

குடம், குட்டம், படுவம், படுவல், படவல் முதலான சொற்களும் மேற்குத் திசையே குறிப்பன.

கோடு எனும் சொல்...வளைவு பொருளில்...மலை வளைவாக.. அமைந்துள்ளமையால் மலையைக் குறித்தது.
உல்= வளைவு பொருள் வேர்.
உல்> குல்>குள்> கொள்>கோள்>கோடு=> வளைந்த மலை

எ.கா. குமரிக்கோடு= குமரி மலை.
குள்>குடு>குட்டு>குட்டம்= மலை.
குட்டம்= மேற்கு திசை
குட்டன்> குட்டுவன்= மலைப் பகுதியை ஆண்ட சேரனின் பெயர்.
குடமுனி= மேற்கு திசை மலையில் வாழ்ந்த அகத்திய முனி. மலையாள அன்பர்கள்..மலையைச் சார்ந்து வாழ்ந்த.. சேர மரபினரே. குடதிசை எனின் மேற்குத் திசையையே குறிக்கும்..என்பதற்கான கரணியம் இதுவே.
சேரநாட்டை மலை நாடு என்றும் குறிப்பிடுவர். சேரநாடு குடநாடு, குட்டநாடு, வேணாடு, கற்காநாடு எனப் பல உள்நாடுகளைப் பெற்றிருந்தது. இச்சிறு நாடுகளை, பேரரசனுக்கு உட்பட்டு அவன் உறவினர்களே ஆண்டு வந்தனர். குட நாட்டை ஆண்டவன் 'குடக்கோ' என்றும், குட்ட நாட்டை ஆண்டவன் 'குட்டுவன்' என்றும் பெயர் பெற்றனர்.
' சேரன் செங்குட்டுவன் ' தமிழ் மன்னனின் பெயரை ஒப்பிட்டு நோக்குக.

குடவர் கோமான் (குடவர் கோ) என்பது சங்ககாலத்தில் குடநாட்டை ஆட்சி செய்த சேர மன்னர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயராகும். 'குடவர்' என்பது குடநாட்டு மக்கள் அல்லது இடையர்களைக் குறிக்கும், அவர்கள் அரசன் என்பதால் இச்சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. குறிப்பாகச் சேர மன்னன் நெடுஞ்சேரலாதன் பதிற்றுப்பத்தில் குடவர்கோமான் எனக் குறிப்பிடப்படுகிறான்.

குட்டுவர் – குட்ட நாட்டில் உள்ளவர்: "பல் குட்டுவர் வெல் கோவே (மது–105).

குட்டுவன் – 1. சேரன்: "குட்டுவன் மரந்தை அன்ன" (குறு:30.3)

குட – 1. மேற்கிலுள்ள: "நாடு பெறினும் தவிரலர்" (அக:91:17).

குடக்கது – மேற்றிசையது : "குடக்கதோ " வி.பா: 16:28)

குடக்கு – மேக்குத் திசை: "கொண்டல் மா மழை குடக்கு ஏர்பு" (நற்: 140:1.)
மேல் பக்கம் (மேற்கு): "கருங்கோட்டுப் புன்னை குடக்கு வாங்கு பெருஞ்சினை" (நற் : 167:1)

குடக்கோ – சேரன்: "குடக் கோ நெடுஞ்சேரலாதற்கு " (பதி :6:1).

குடக் கோழி – மேற்கே உள்ள உறையூர்: "வாழி குடக் கோழி மா நகர்" (ஒட்:5:812).

குட கடல் – மேல் கடல்: "ஞாயிறு குட கடல் சேரும் படர்கூர் மாலையும்" (அக: 378:14–5).

குடகம் – மேற்கு: "வேறு படக் குடகத்தி (ல்)லை அம்பலவாணன்"(வன்:7:10:2).

குடகன் – சேரன்: "வில்லவன் கொங்கன் ....குடகன்.... சேரன் பேரே" (நிக.சூ:2:16).

குட காற்று – மேல் காற்று (கோடை): "குட காற்று எறிந்தகுப்பை" (பெரும்:239).

குடகு – குடகுமலை: "கொண்டல் குமுறும் குடகு இழிந்து மதகு உத்தி" (அட்: 1:74)

குடதிக்கு – மேற்றிசை: "தென் குட திக்கினில் செய்த சித்திர மண்டபம்" (கலிங்: 11:4).

குடதிசை – மேலைத் திக்கு: "குட திசைத் தண் கதிர் மதியம்"(புற:56:23–4).

கதிரவன் மறைவது மேற்கு திசையாகையால் இத்திசை படுவல், படவல் திசை என்றும் சொல்லப்பட்டது. இச்சொல்...கன்னடத்தில் அப்படியே வழங்குகின்றது.
படுவான்கரை எனும் சூரியன் மறையும் கடற்கரை ஊர் ஈழத்தில் உண்டு.

படு= நிலத்துடன் தாழ்ந்து சாய்தல்.
படுத்தல் = நிலத்தில் சாய்ந்து உறங்கல்.
படு > படுவல்>படவல்>படவம்= கதிரவன் சாயும் மேற்குத் திசை.

உல் = துளைத்தல் , தோண்டல் , அகழ்தல் பொருள் வேர். துளைக்கப் படுவது தோண்டலும் அகழ்தலுமாகும். நிலத்தை அகழ குழிந்து பள்ளமாகித் தாழும். எனவே தாழ்ந்து கீழ்நோக்கிய திசை,
உல் > புல் > பல் > பள்> பள்ளம்> பள்ளு பள்>படு > படுவம் > படவம்

உல் > குல் = நிலத்தைக் குத்தி , கிழறித் துளைப்புப் பொருள் வேர். குல் > குழ் > கிழ் > கீழ்

கிழ் > கிழக்கு
கிழ்> கீழ் > கீழை

குல் > குன் > குனி = தாழ், வளை
குல் > குன்> குண்> குணக்கு = தாழ்ந்த நிலத்திசை
குண்> குணா = குணக்கு

குல்> குண் >குணி= தாழ், கீழ்...எனும் பொருளில்...
மேல் திசைக்கு எதிர்புறம் தாழ்ந்து கீழ்நோக்கி இருக்கின்றமையால்...
கிழக்குத் திசையைத் குறித்தது.
கீழ்> கீழ்க்கு> கிழக்கு.
கிழக்குத் திசை= கீழ்த்திசை= குணதிசை= குணக்கு.

குண – கிழக்கிலுள்ள: "குண கடல் முகந்த கொள்ளை வானம்" (அக:278:1).

குணக்கு – கிழக்கு: "நெய்தல் கூம்ப நிழல் குணக்கு ஒழுக" (நற்:187:1).

குணகடல் – கீழ்க்கடல்: "குண கடல் திரையது பறை தபு நாரை" (குறு:128:1)

குண குட கடல் – கீழ்த்திசைக் கண்ணும் மேற்றிசைக் கண்ணும் அமைந்த கடல்: "குண குட கடலா எல்லை" (புறம் : 17:8).

குணமுதல் – கீழ்த்திசை , "குணமுதல் தோன்றிய ஆர் இருள் மதியின்" (மது: 195)

குணாஅது – கிழக்கிலுள்ளது: "செல்லூர்க் குணாஅது" (அக: 90:9).

குணாது – கிழக்கிலுள்ளது: "வேளிர் குன்றூர்க் குணாது தண் பெரும் பௌவம் அணங்குக" (குறு: 164:3–4).

தொடரும்...

அந்தி

முனைவர் ஆ. அரிமாப்பாமகன்
மேனாள் ஆங்கில விரிவுரையாளர்
புதுச்சேரி

"ஆதி வீடு, அந்தம் காடு
இதில் நான் என்ன அடியே நீ என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருள் என்ன நீ வந்த கதை என்ன? ...
தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு."
(கண்ணதாசன், அவள் ஒரு தொடர்கதை).

அந்தி – பகற்பொழுது முடியும் வேளை.

அந்திமம் – வாழ்வின் இறுதிக் காலம்.

அந்திசந்தி (எதிரொலிச் சொல், தட்டுமுட்டுப் போல) – பகலும் இரவும் சந்திக்கும் அந்தி வேளை.

அந்தி – மாலை மயங்கும் பொழுது,

"கழு நீர் கொண்ட எழுநாள் அந்தி
யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே"
(மதுரைக்காஞ்சி).

இலக்கியச் சுவைக்காகக் கலிங்கத்துப் பரணியிலிருந்து:

"உந்திச் சுழியின் முளைத்தெழுந்த
உரோமப் பசுந்தா ளொன்றிலிரண்டு
அந்திக் கமலம் கொடுவருவீர்
அம்பொன் கபாடம் திறமினோ!"

அறு – முடித்துவிடு,

"உனக்கும் எனக்கும் உறவு அறுந்து போச்சு".

அற்றுப் போதல் – அழிந்துவிடல்,

"அந்தக் குடும்பம் பூண்டோடு அத்துப் போச்சு".

"அறிவு அற்றம் காக்கும் கருவி" (குறள்).

அற்றம் – அத்தம் – முடிவு.

அத்தம் > அத்தமி – (அஸ்தமி) – அத்தமனம் = மறைதல், முடிவாதல்.

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன்
சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்".
(காளமேகப்புலவர்).

அத்தமிக்கும் போது – சூரியன் மறையும் பொழுது, பகல் முடியும் வேளை.

அத்தம் – கத்தம் – கதம் (இந்தி) = முடிவு.

(அம் > கம் = நீர்).

[கத்து – கத்தல் – (கத்தம்) – சத்தம் – (சப்தம்) – சந்தம்.

க > ச.

கண்பு > சண்பு – சண்பங்கோரை.

"பொன்காண் கட்டளை கடுப்ப கண் பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்"

– பெரும்பாணாற்றுப்படை.

சம்பு < சண்பு < கண்பு (Typha angustifolia /esser bulrush, narrowleaf cattail/esser reedmace)].

அத்தம் – அந்தம் – (அந்தி) = முடிவு,

"அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"

(தொல்காப்பியம் –1189).

அந்தமில் = முடிவில்லா, எல்லையில்லா.

"..அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தம் இல் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்.."

(தொல்காப்பியம், பொருளதிகாரம்).

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்.."

(மாணிக்கவாசகர், திருவெம்பாவை).

ஒரு பாட்டின் ஈற்றில் நிற்கும் சீர், சொல், அசை, எழுத்து அடுத்த பாட்டின் முதலில் வருமாறு பாத் தொடுப்பது அந்தாதி (அந்தம் + ஆதி) எனப்படும். இது வடசொல்லோ எனக் கருதித் தமிழன்பர்கள் 'ஈற்றுமுதலி' என இதைக் குறித்துவந்தனர். இனி, அந்தாதி என்றும் கையாளலாம்!

அந்தம் – அந்த (இந்தி) – end.

end (n.)

Old English ende "end, conclusion, boundary, district, species, class," from Proto-Germanic *andiaz (source also of Old Frisian enda, Old Dutch ende, Dutch einde, Old Norse endir "end;" Old High German enti "top, forehead, end," German Ende, Gothic andeis "end"), originally "the opposite side," from PIE *antjo "end, boundary," from root *ant- "front, forehead," with derivatives meaning "in front of, before."

வாக்காளர் உறுதிமொழி ஏற்பு – 23.01.2026

பரணர் பாடலில் நியூட்டன் விதி

இலக்குவனார் திருவள்ளுவன்

தலைவர் – தமிழ்க் காப்புக் கழகம்

நியூட்டன் விதிகள் என நம்மால் போற்றப்படுவன, அறிவியலாளர் ஐசக் நியூட்டனின் (திசம்பர் 25, 1642–மார்ச்சு 20, 1727) கண்டுபிடிப்புகளில் குறிப்பிடத் தகுந்தனவாகும். விசை, விரைவு பற்றிய இவ்விதிகளுள் நியூட்டனின் இரண்டாம் விதி பற்றி மட்டும் நாம் பார்க்கப் போகிறோம்.

திசைவேகம், பொருளின் தாக்கும் விசையைப் பொறுத்து அமையும் என்கிறார் அவர். இதன்படி, ஒரு நேர்கோட்டில் செல்லும் விசை, குறிப்பிட்ட ஒரு பொருளின் மீது தாக்கும்போது அந்த விசை வேகம் மாறுபட்டு அமையும் அல்லது குறையும். 18ஆம் நூற்றாண்டில் விசைவேக விதியைக் கண்டுபிடித்தார் அறிவியலாளர் நியூட்டன். இதே விதியைப் புலவர் பரணரும் எடுத்துக்காட்டு மூலம் மறைமுகமாக நமக்கு விளக்குகிறார் என ஆய்வாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

கடையெழு வள்ளல்களில் ஒருவன் வல்வில் ஓரி என அழைக்கப்பெறும் ஆதன் ஓரி என்னும் சிறப்பு மிக்க மன்னன். இம்மன்னன் வில் வித்தையில் சிறந்தவன் என்பதை வல் வில் என்று குறிக்கப்படுவதில் இருந்தே நாம் புரிந்து கொள்ளலாம். வில்லுக்கு விசயன் என நம் நாட்டவர் அல்லாத மன்னனை அல்லது கற்பனையான கதைப் பாத்திரத்தைப் போற்றும் நமக்கு வில்லுக்கு ஓரி என்று கற்றுக் கொடுத்திருந்தால் இம்மன்னனின் சிறப்பை அறிந்திருப்போம். நாமக்கல் பகுதியில் உள்ள கொல்லிமலைக்கு மன்னனாகச் சிறந்து விளங்கியவன் இவன்.

மன்னன் வல்வில் ஓரி ஒரு முறை காட்டிற்குச் சென்று வேட்டையாடுகையில் அவ்வழியே வந்த புலவர் பரணர் பார்த்துவிட்டு உடனே, அக்காட்சியைப் பாட்டிலே படம் பிடித்து நிலைக்கச் செய்துவிட்டார்.

வல்வில் ஓரி எய்த ஒரே ஓர் அம்பு நேர்க்கோட்டில் அமைந்த ஐந்து உயிர்களைப் பறித்து விட்டது. அவன் யானையின் மீது அம்பு தொடுத்தான். யானை மீது பாய்ந்த அம்பு அதனை வீழ்த்தியதுடன் தன் கடமை முடிந்து விட்டது என்று நின்று விடவில்லை. அந்த யானை மீது பாயலாம் எனப் பார்த்திருந்த புலியின் வாயில் ஊடுருவி, வெளியேறி அப்பக்கம் குறுக்கே வந்த மானையும் ஊடுருவிக் கொன்று, அடுத்து இருந்த பன்றியை வீழ்த்தி, உடும்பில் பாய்ந்து அதனையும் தைத்து மடியச் செய்து விசை வேகம் படிப்படியே குறைந்ததால் நின்று விட்டது.

வில்லில் இருந்து வேகமாக விடுபட்ட அம்பு போகப்போக வேகம் குறைந்து அதற்கேற்றவாறு சிறிய சிறிய உயிர்களை மடியச் செய்து இறுதியில் செயல் இழந்தது எனப் புலவர் விளக்கி உள்ளார். மன்னன் வல்வில் ஓரியின் வில்வித்தைச் சிறப்பைக் கூறும் அறிவியல் உண்மை அடங்கிய பாடல் வரிகள் பின்வருமாறு:

ஞுவேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ் வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ,
புழல் தலைப் புகர்க் கலை உருட்டி, உரல் தலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்,
வல் வில் வேட்டம் வலம் படுத்து இருந்தோன்

(புறநானூறு 152)

(வேழம்–யானை; பகழி–அம்பு; உழுவை–புலி; புகர்க்கலை – புள்ளி மான்; கேழல் பன்றி–ஆண் பன்றி; புற்றத்து உடும்பில் –புற்றில் உள்ள உடும்பின் மீது)

இப்பாடல் வரிகள் மூலம் வில்லில் இருந்து விடுபட்டு விரைவாக வெளியேறும் அம்பின் விசை போகப்போகக் குறையும் தன்மையை – விசைவேக இலக்கணத்தை – ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புலவர் பரணர் உணர்த்தி உள்ளதை அறியலாம்.

இதனை வரலாற்று நிகழ்வைக் கூறும் இலக்கிய வரிகளாகக் கருதிய நாம் இதில் புதைந்துள்ள அறிவியல் உண்மையைப் புரிந்து கொள்ளாமல் போனது ஏனோ?

நன்றி: அன்றே சொன்ன அறிவியல்

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு – 30.01.2026

தலைப்பாடு = நிகழ்தகைமை (probability) : கருத்தாய்வு

பேரா. முனைவர் ப. கொழந்தசாமி,
அரசினர் ஆய்வு நிறுவனம், புதுச்சேரி.

பழங்காலத்தில் அனைத்து அறிவுத் துறைகளும் இலக்கியங்களாகக் கருதப்பட்டதால், அரசியல், போரியல், பொருளாதாரம், மனையியல், வேளாண்மை, மருந்தியல், இறையியல் போன்ற பலதுறைக் கருத்துகளின் புதைவிடமாக இலக்கியங்கள் திகழ்கின்றன. மேலும் இசை, கணிதம், வானியல் சார்ந்த நூல்களும் இவற்றைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் தமிழகத்தில் இருந்தனர்; முழு / பின்ன எண்கள் பயன்படுத்தப்பட்டன. ஆகவே தொல்காப்பியம் தொடங்கி இலக்கண, இலக்கியங்களில் இத்தகைய கருத்துகள் காணப்படுகின்றன. இம் முறையில் நிகழ்தகைமை குறித்த கருத்து, புறநானூறு 70ஆம் பாவின் 18ஆம் அடியில் இயல்வதை விளக்குவதாக இக் குறிப்புரை அமைகின்றது. கோவூர் கிழார் கிள்ளிவளவனின் ஈகைத் திறனைப் போற்றுகையில், நாடி வந்த இரவலர்க்கு உறுதியாகப் பரிசளித்து வளப்படுப்பான் என்பதை,

விறகு ஒய் மாக்கள் பொன் பெற்றன்னதோர்
தலைப்பாடு அன்று, அவன் ஈகை;
நினைக்க வேண்டா; வாழ்க, அவன் தாளே!

(புறநானூறு பா 70; அடிகள் 17–19)

என்றவாறு ஓர் உவமை கூறிப் போற்றுகின்றார். அதாவது, விறகு சேகரிக்கக் காட்டுக்குள் செல்வானுக்கு எப்போதாவது/ நல்வாய்ப்பாகப் பொன் காசு கிடைப்பதுண்டு. மேலும் அது நிலையானதன்று/ குறைவான நிகழ்தகைமை உடையது. ஆனால் கிள்ளிவளவனின் கொடை நிலையானது; முழு நிகழ்தகைமை உடையது என்று கோவூர் கிழார் உறுதியளிக்கின்றார். இதை, Probability is the branch of math measuring how likely an event is, expressed as a number from 0 (impossible) to 1 (certain), calculated by dividing favorable outcomes by total outcomes, and used to quantify uncertainty in daily life, science, finance, and AI. என்னும் விளக்கத்தோடு இணைத்து நோக்கலாம். பாணனின் ஐயத்தைப் போக்கி, வளவனின் ஈகைப் பெருமையைப் போற்றுகின்ற இவ் அடிகள் ஆழமான அறிவுத் தேடலுக்கு வாய்ப்பாகின்றன.

அகரமுதலி இயக்கக நூல்கள் விற்பனை



சென்னை – நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் 08.01.2026–21.01.2026 வரை நடைபெற்ற, சென்னை 49ஆது புத்தகக் காட்சியில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குரிய 542, 543ஆம் அரங்குகளில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடுகள் விற்பனை செய்யபட்டன. அகரமுதலி இயக்ககத் தொகுப்பாளர் திரு.கி.இராமர் விற்பனைப் பணியினை மேற்கொள்ள, தமிழன்பர்கள் சொற்பிறப்பியல் அகரமுதலிகளை ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் 27.12.2025ஆம் நாள் நடைபெற்ற தூய தமிழ் இயக்ககத்தின் 110 ஆம் ஆண்டுப் பெருவிழாவின்போது, அரங்கில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அகரமுதலி இயக்கக வெளியீடுகளைத் தமிழன்பர்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். இயக்ககக் கண்காணிப்பாளர் திருமதி ஆ.மு.பிந்து, தொகுப்பாளர் திரு.கி.இராமர், பதிப்பாசிரியர் திரு.கி.தமிழ்மணி ஆகியோர் சொற்பிறப்பியல் அகரமுதலிகளின் சிறப்புகள் குறித்து வாசகர்களிடம் எடுத்துரைத்தனர்.

அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 197,198–ஆம் கூட்டங்கள்

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத் தமிழ்க் கலைக்கழகத்தின் 197, 198ஆம் கூட்டங்கள் முறையே 28.01.2026, 30.01.2026 ஆகிய இருநாள்கள் நடைபெற்றன.

அகரமுதலி இயக்கக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி க. பவானி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில், அலுவல்சாரா உறுப்பினர்களான புலவர் வெற்றியழகன், முனைவர் கு.பாலசுப்பிரமணியன், முனைவர் இரா.கு. ஆல்துரை, திரு. அ. மதிவாணன், அறிவியல் ஒளி ஆசிரியர் திரு. நா. சு. சிதம்பரம் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தமிழ்மொழி (ம) மொழியியல் புல உதவிப் பேராசிரியர் முனைவர் நா. சுலோசனா மற்றும் அலுவல்சார் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இவ்விரு கூட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 502 தமிழ்க் கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது.

ஏற்பளிக்கப்பட்டுள்ள சொற்களுள் சில:

Anchoring effect	அறுதியீட்டு விளைவு
Bank panic	வைப்பக மருட்சி
Barometric price leader	விலை நிலை உறுதிபடுத்துநர்
Big Board	பெருந்தரவல் பலகை
Canon of taxation	வரிவிதிப்பு நெறி
Capital ratio	முதலீட்டு வகிதம்
Classical unemployment	மிகைக்கூலி கோரி பணிமறுப்பு
Clean float	தடையிலாப் பணவோட்டம்
Coincident indicator	உடனிகழ் காட்டி
Currency unit	நாணய அலகு
Discretionary policy	விருப்புரிமைக் கொள்கை
Exchequer stock	கருவூல இருப்பு
Extraordinary item	அரும்பொருள்
Harmonisation	இணக்கப்படுத்தல்
Homoscedasticity	மாறுபாட்டில் ஒருமை
Recessionary gap	மந்தநிலை இடைவெளி
Revolving loan	சுழற்கடன்
Artificially scarce goods	செயற்கைத் தட்டுப்பாட்டுப் பொருள்
Biological feasiblity	உயிரியல் இணக்கம்
Cap and trade	வரம்புடை வணிகம்
Countercycle	எதிர்ச்சுழற்சி
Creative destruction	அழிவினிலாக்கம்
Diagrammatic presentation	வரிப்பட வழங்கல்
Economic profit	பொருளண ஈட்டம்
Expected inflation	எதிர்நோக்குப் பணவீக்கம்
Free market system	கட்டிலாச் சந்தை முறை
Hyperglobalization	மிகை உலகமயமாதல்
Missing market	காணாச் சந்தை
Short termism	குறுங்கால நோக்கியம்
Virtual bank	மெய்ந்நிகர் வைப்பகம்

நாளும் விளையும் சொற்கதிர்

நாளும் விளையும் சொற்கதிர்



நாளும் விளையும் சொற்கதிர்